Registered as a Newspaper in Ceylon ✶ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 116

National Tamil Daily தேசிய தினசரி

(7-6-65)

விசுவாவசு வைகாசி 25 வளர் பிறை 6 திங்கட்கிழமை

## வேள்விப் பலியிலும் அரசியல் தகராறு!

காங்கேசன்துறை, ஞாயிறு ஆலயங்களில் ஆடு, கோழி பலியிடுவதிலும் காங்கேசன்துறையில் கட்சி அரசியல் தலையீடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. காங்கேசன்துறையிலுள்ள மாம்பராய் வைரவர் ஆலயத்தில் வருடா வருடம் வேள்விப் பலி நடைபெறுவது வழக்கம். இம்முறை அப்பகுதி மக்கள் சிலர் எடுத்துக்கொண்ட முயற்சியால் வேள்விப்பலி நடைபெறாமல் தடுப்பதற்கு அந்த கோயில் உரிமையாளர் முன்வந்து நடவடிக்கையெடுத்தார். ஆனால் வழமைபோல் பலி நடைபெற வேண்டுமென வேறு சிலர் பிடிவாதத்துடன் முயற்சி செய்தனர். இதனால் ஆலயத்தில் பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தது. ஆனால் அந்த ஆலயத்தின் எதிரேயுள்ள காணிக்குள், ஆலயத்திற்கும் காணிக்கும் இடையில் ஒரு சிறு 'வேலி' கட்டி வழக்கம் போல் வேள்விப்பலி நடைபெற்றது. ஆலயத்தில் பொலிஸார் காவல்புரிந்துவருகின்றனர். வேள்விப்பலி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நடைபெற்றது. ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் வேள்விப்பலியை நிறுத்த வேண்டுமென்று முயற்சி செய்ததாகவும் இதனால் அந்தக் கட்சிக்கு எதிரானவர்கள் பலியை நடத்த வேண்டுமென்று முடிவுசெய்ததாகவும் அறியப்படுகிறது.

# “வட-தென் நல்லெண்ண பாலம் நிரந்தரமானது”

## குரும்பசிட்டியில் அக்குரணை எம். பி.

## “வட்டமேசை மகாநாடு கிடைக்கும் உரிமையையும் பறித்துவிடும்”

— எஸ். ஜே. வி.

குரும்பசிட்டி, ஞாயிறு

தென்னிலங்கைக்கும் வட இலங்கைக்கும் இடையில் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டதன் மூலம் நல்லெண்ணப்பாலம் நிறுவப்பட்டுள்ளது. இது நிரந்தரமான பாலம். இந்த நாட்டில் தேசிய ஒற்றுமையை நிலைநாட்டும் வரையில் சோஷலிஸத்தையோ முன்னேற்றத்தையோ ஏற்படுத்த முடியாது” என்று அக்குரணை எம். பி. திரு. ஏ. ஸி. எஸ். ஹமீத் குரும்பசிட்டியில் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரமொன்றில் பேசுகையில் கூறினர்.

வடபகுதியில் தமிழ்மக்கள் தங்களுக்கிடையிலுள்ள அபிப்பிராய பேதங்களை தமிழ்ப் பேசும் மக்களின் நலனை இத்தேசித்து நீடிக்க விடாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று கூறினர்.

குரும்பசிட்டி கிராமமுன்னேற்றச்சங்கத்தாரால் கிராம முன்னேற்றச் சங்கத் திறந்த வெளியரங்கில் திரு. நா. இளையதம்பி தலைமையில் சென்ற வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற இவ்விழாவில் திரு. ஹமீத் மேலும் குறிப்பிட்டதாவது:

“தென்னிலங்கைக்கும் வட இலங்கைக்கும் மத்தியில் நல்லெண்ணப் பாலமொன்று அமைக்கத் தேசிய அரசாங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலத்தின் பிரதானமான சிற்பி பிரதமர் டட்லி சேனநாயக்கா ஆவர். இப்பாலத்தின் அஸ்திவாரம் நிரந்தரமானது. எந்தச் சக்திகளாலும் பாதிக்கப்படாதது. சாதி, மதத் துவேஷக் காற்றினாலும் வெள்ளத்தாலும் அது பாதிக்கப்படாது. இந்த நல்லெண்ணப் பாலத்தை அமைக்க நமக்கு விண்ணை அளக்கவும் மண்ணைப் பிளக்கவும் நிபுணர்கள் தேவையில்லை. உருக்கு, இரும்பு அவசியமில்லை. இந்தப் பாலத்தை அமைக்கச் சிறுபான்மை மக்கள் மத்தியிலும் பெரும்பான்மை மக்கள் மத்தியிலும் ஒரு கனஞ்ச நல்லெண்ணமே தேவையானது இது இன்று தாராளமாக உண்டு. எனவே நாம் எதிர்காலத்தின் மீது நம்பிக்கை வைக்கமுடியும். எமது நாட்டில் சோஷலிஸம் முன்னேற்றம் ஆகியவை பற்றி அரசியல்வாதிகள் கூறுகிறர்கள். இந்த நாட்டிலே ஒற்றுமையை நிலைநாட்டும்வரை சோஷலிஸத்தையோ அல்லது முன்னேற்றத்தையோ எதிர்பார்க்கமுடியாது. எதிர்பார்ப்பதும் தவறு இந்தத் தேசிய ஒற்றுமை போதனையில் மட்டும்தான் சாதனையில் இல்லையென்று பெருமூச்சு எறிந்து கொண்டு நல்லெண்ணம் நிறைந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் இந்த தேசிய அரசாங்கத்தைக் கண்டு எதிர்காலத்தின்மீது நம்பிக்கை வைக்கும் ஆரம்பகட்டத்தில் ஒரு சோகமான காட்சியினை நாம் காண்கிறேம். இந்நாட்டின் முற்போக்குச் சக்திகளென்று தம்மைத் தாமே அறிமுகப்படுத்திக் கொள்ளும் ஒரு குழுவினர், தேசிய ஒற்றுமையைப்பற்றி கூரைமேலிருந்து கூறிய அதே பிரிவினர் தேசிய ஒற்றுமையை நிலைகாட்டும் முதல் கட்டமாக அமைந்த தேசிய அரசாங்கத்தைப்பார்த்து தோசை, வடை, நல்லெண்ணெய் பற்றியெல்லாம் பேசுகிறர்கள். இது கவலையளிக்கிறது.

### பிரிவினைக்கு பொருளாதாரமே காரணம்

இலங்கையிலுள்ள மக்கள் சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் எனவும் சிறுபான்மை; பெரும்பான்மை இனத்தவர்களென்றும் பிரிக்கப்பட்டுள்ளனர். இப்பிரிவுக்குக் காரணம் பொருளாதாரமேயாகும். ஒருநாட்டில் வாழும் மக்களெல்லோருக்கும் தொழில் இருந்தால், எல்லோரும் சாதாரணமாக வாழ வழியிருந்தால், இப்பேர்ப்பட்ட பிரிவுகள் தோன்றியிருக்கமாட்டாது. இந்தவேற்றுமைகளுக்கு பரிகாரம் பொருளாதார அபிவிருத்தியாகும். ஆனல் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமான சூழ்நிலை தேசிய ஒற்றுமை. இத்தேசிய ஒற்றுமையைநிலைநாட்டுவதற்கு பதிலாக, சாதித்துவேஷத்தை கிளப்பி இதனை தடுப்பதற்காக எங்கள் அரசியல் விரோதிகள் முயற்சிக்கின்றனர்.

### தமிழ்பேசும் மக்களுக்கும் பங்கு

நதிகள், ஆறுகள், ஓடைகள் பின்னேக்கி ஓடுவதில்லை. இவை முன்னேக்கி ஓடவேண்டுமென கடந்த பொதுத்தேர்தலிலே நம்நாட்டு மக்கள் தீர்மானித்துள்ளனர். இத்தீர்மானம் சரித்திரம் நிறைந்தது, இத்தீர்மானத்தில் தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு பெரிய பங்கு உண்டு. இந்நாட்டிலே ஜனநாயகம் வாழவேண்டுமென இத்தீர்மானமூலம் மக்கள் கட்டளையிட்டுள்ளனர், ஆனல் ஜனநாயகம் வாழ்வதற்கு வாழு, வாழ இடங்கொடுஎன்ற அடிப்படையில் சிறுபான்மை இனத்தவரும் பெரும்பான்மை இனத்தவரும் பிரச்னைகளைத் தீர்க்க முயலவேண்டும், சிறுபான்மையோருடைய கோரிக்கைகள் சாதாரண கோரிக்கையாக இருத்தல் வேண்டும். அதே நேரத்தில் பெரும்பான்மையோர் சிறுபான்மையோருடைய கோரிக்கைகளை அநுதாபத்துடன் நோக்கவேண்டும், இப்பேர்ப்பட்ட நல்லெண்ணமனப்பான்மை சிறுபான்மை இனத்தவரிடையிலும் வளரவேண்டும். ஆனல் தமிழ்பேசும் சமுதாயத்தில்ஒருஅங்கத்தவன் என்ற மோதாவில் ஒரு வேண்டுகோளை தயவாக விடுக்க விரும்புகின்றேன். உடைகள் மத்தியில் தோன்றும

(6-ம் பக்கம் பார்க்க)

## “இனத்தின் நல்வாழ்வுக்காக எவருடனும் ஒத்துழைப்போம்”

### பருத்தித்துறையில் தமிழரசுக்கட்சி செயலாளர் கருத்து

பருத்தித்துறை, ஞாயிறு “சமஷ்டி அரசியல் அமைப்பில் அல்லது பிரிவினையில் நாம் நமது பிரச்னைகளுக்கு நிரந்தரமான தீர்வுகாணமுடியும். பிரிவினையினுல் பல கஷ்டங்கள் உண்டு. அதனுலேயே சமஷ்டி அரசியலமைப்பை விரும்புகிறேம். இது எமது நீண்டகால இலட்சியம். மொழி எமது உயிரேயெனினும், அதைவிட எமது பிரதேசம் பாதுகாக்கப்படவேண்டியது மிகமிக அவசியமாகும். தமிழ்பேசுமினம் தப்பிப் பிழைக்க எமது பிரதேசங்கள் பாதுகாக்கப்பட மாவட்ட சபைகளை நாம் கோரினேம். அதனுல் பிரதேசவாரியாக முன்னேற்றம் ஏற்படுவதுடன் அதிகாரமும் பகிர்ந்தளிக்கப்படும். மாவட்டசபைகள் மூலம் மொழியுரிமை நிலைநாட்டப்படுவதுடன் எமது பிரதேசத்தை நாமும் ஆளும் உரிமையும் உருவாகும்.”

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக்கட்சிப் பொதுச்செயலாளரும், வட்டுக்கோட்டை எம். பி.யுமான திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று வடமராட்சிப் பகுதிக்கான தமிழரசுக்கட்சியின் மத்திய அலுவலகத் திறப்புவிழாவில் பேசுகையில் கூறினர்.

பருத்தித்துறை 1-ம் கட்டைச் சந்தியிலுள்ள கட்டிடம் ஒன்றில் நிறுவப்பட்ட காரியாலயத் திறப்புவிழா இளைப்பாறிய ஆசிரியர் திரு. எஸ். வீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது. (2-ம் பக்கம்பார்க்க)

## கூட்டுறவு இயக்கத்தில் அரசியல் கூடாது

### ஆய்வு வகுப்பில் தலைமையுரை

யாழ்ப்பாணம், திங் “கூட்டுறவு இயக்கங்களில் அரசியலைப் புகுத்தவேண்டாமென்றும், அனுவசியமான அரசியல் தலையீடுகளைத் தவிர்த்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகக் கூட்டுறவு இயக்கத்தில் பணியாற்றவேண்டும்” என்றும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆரம்பமான கூட்டுறவு ஆய்வு வகுப்புக்குத் தலைமைதாங்கிப் பேசிய சமாசத் தலைவர் திரு. ஏ. ஈ. தம்பர் கூறினர். கூட்டுறவு ஆய்வு வகுப்பு ஆரம்பக் கூட்டத்துக்கு யாழ்ப்பாணம் காரியாதிகாரி பகுதியிலிருந்து 200 பேர் சமூகமளித்திருந்தனர்.

திரு. ஈ. ஏ. தம்பர் தலைமையுரையில் மேலும் கூறியதாவது:

தேசிய அரசாங்கம் தனிப்பட்ட வர்த்தகர்களுக்கும் சமசந்தர்ப்பமளிக்கத் தீர்மானித்துள்ளது. ஆதலால் நாம் எமது தவறுகளையும் பற்றுக்குறைகளையும் நிவிர்த்திசெய்து சிறந்த முறையில் மக்களுக்குச் சேவைசெய்யவேண்டும், தனிப்பட்ட கடைகளுடன் கூட்டுறவுக் கடைகளை ஒப்பிடும்போது கூட்டுறவுக் கடைகள் குறைவாகவே காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தின் முக்கிய இடங்களில் கூட்டுறவுக் கடைகள் இல்லை. சில்லறை விற்பனை நிலையங்களையும் கூட்டுறவுச் சங்கங்கள் கையேற்றுள்ள போதிலும் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய மேலும் பல இடங்களில் கூட்டுறவுக் கடைகளை ஆரம்பிக்கவேண்டும்.

சங்கங்களின் வெற்றிக்கு ஒரு காரணம் அங்கு கடமையாற்றும் தொழிலாளர்களே. அவர்களுக்கு நல்ல கல்வி அறிவு இருக்கவேண்டும், அவர்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் செலுத்தவேண்டும். தொழிலாளர்கள் திறமையாகக் கடமையாற்றினுல்தான் சங்கங்கள் முன்னேறும்.

திரு. ஆர். ராஜரத்தினம் பேசும்போது கூறியதாவது:

இப்படிப்பட்ட ஆய்வு வகுப்புகள் நடத்தவேண்டிய அவசியம் எப்பொழுதோ இருந்து வந்தது. பத்து வருடத்திற்கு முன் ஆய்வு வகுப்பை உருவாக்க முற்பட்டபோது இலங்கைத் தலைவர்களின் மாற்றத்தினுலும் மந்திரிகளினுல் கொடுக்கப்பட்ட கட்டளைப்படியும் நிறுவ இயலாத சந்தர்ப்பம் ஏற்பட்டது. இப்பொழுது இவற்றை நிறுவச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

டென்மார்க்கில் சங்கங்கள் கடாத்த உப-விதிகளும், சட்டங்களும் இல்லை, சங்கங்

(6-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

எவனொருவன் தான் மிக எளியவனாகவும் மற்றையோர்க்கெல்லாம் தாழ்ந்தவனாகவும் தொண்டுசெய்பவனாகவும் இருக்க முயற்சி செய்யாமல் இருக்கிறானே அவன் அதிக காலம் அல்லது அமைதி உள்ளவனாக இருக்கமுடியாது.

— பரமஹம்சர்

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Pox 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு வைகாசி ௴ 25 ௳ (7-6-65)

## கூட்டுறவு இயக்கம்

கூட்டுறவு இயக்கத்தில் அரசியலைப் புகுத்தக்கூடாதென்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மண்டபத்தில் ஆரம்பமான கூட்டுறவு ஆய்வு வகுப்புகளுக்குத் தலைமை வகித்த யாழ்ப்பாணம் பலநோக்கக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாஜத் தலைவர் திரு. ஏ. ஈ. தம்பர் கேட்டுக் கொண்டார்.

புத்தளத்தில்தான் இலங்கையில் கூட்டுறவுச்சங்கங்கள் தோன்றின. இதன் மூலம் பொதுமக்கள் பெரும் பயனடைந்தனர். அன்று தொடக்கம் இன்றுவரை கூட்டுறவு இயக்கம் இங்கு வளர்ச்சியடைந்து பெரும் சேவை செய்துள்ளது. இலங்கையில் கூட்டுறவு இயக்கம் பொதுவாக வளர்ச்சி பெற்றுள்ள போதிலும் யாழ்ப்பாணத்தில் அது அடைந்த முன்னேற்றம் தென்னிலங்கைக்கும் வழிகாட்டிவந்துள்ளது. கூட்டுறவு இயக்கத்திலும் சில பெருச்சாளிகள் நுழைந்து ஊழல், கையாடல், மோசடிகளுக்கு இடமளித்ததைத் தொடர்ந்து கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி இங்கு ஓரளவு தடைபட்டது. கூட்டுறவு இயக்கம் பொதுமக்களின் இயக்கம். இதில் ஊழலுக்கும் மோசடிக்கும் இடமளித்தால் அது பொதுமக்களையே பாதிக்கும். இந்த இயக்கத்தில் பெருச்சாளிகள் நுழையாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது பொதுமக்களின் கடமை.

முன்னைய அரசாங்கம் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியும் உற்சாகமும் அளித்தது. அதே சமயம் கட்சி அரசியல், கூட்டுறவு இயக்கத்தில் அநாவசியமாகத் தலையிடவும் அது இடமளித்தது. சமூகப் பெருச்சாளிகளை விட கூட்டுறவுத் துறையில் அரசியல் தலையீடு மிக ஆபத்தானதென்பதை பல சம்பவங்கள் எடுத்துக்காட்டியுள்ளன. கூட்டுறவு இயக்கத்தில் அரசியல் தலையீடு அதிகரித்ததன் விளைவாக முன்னைய அரசாங்கத்தின் கூட்டுறவுபற்றிய அதன் இலட்சியமே பாழடைந்தது. கூட்டுறவு இயக்கத்தில் ஊழலும் மோசடியும் மலிந்து அதன் விளைவாகப் பொதுமக்கள் கூட்டுறவு இயக்கத்திலும் அதன் மூலம் அரசாங்கத்தின் மீது அதிருப்தியடைந்தனர். கூட்டுறவு இயக்கத்துறையில் பணியாற்றும் ஊழியர்கள் நேர்மையுடனும் சேவைமனப்பான்மையுடனும் தமது கடமையைச் செய்தால் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியடையும், பொதுமக்களுக்கும் பயன் கிடைக்கும்.

தேசிய அரசாங்கம் கூட்டுறவு இயக்கத்துக்கும் தனிப்பட்ட வர்த்தகர்களுக்கும் சமசந்தர்ப்பம் அளிக்கத் தீர்மானித்துள்ளது. வர்த்தகத்தில் ஒரு பிரிவினருக்கு ஏகபோக உரிமையளிப்பது துஷ்பிரயோகத்துக்கு வழிவகுக்கக் கூடுமென்பது கடந்தகாலத்தில் அறிந்த உண்மை. எனவே கூட்டுறவுத் துறைக்கும் தனியார் துறைக்கும் சமசந்தர்ப்பம் அளிப்பது வர்த்தகத்தில் போட்டியை ஏற்படுத்திஅதன் மூலம் விலைவாசிகள் குறைய வழிவகுக்கக்கூடும், வர்த்தகத்தில் போட்டிக்கு இடமளிக்க வேண்டும். இல்லையேல் கூட்டுறவுத்துறையாயினும்சரி தனியார் துறையாயினும்சரி தம் இஷ்டம்போல் நடந்து கொள்ளவே முனையும். இதனால் வாழ்க்கைச் செலவு அதிகரித்து பொதுமக்களே பாதிக்கப்படுவர். தனியார் துறைக்கும் சமசந்தர்ப்பம் அளிப்பதென அரசாங்கம் தீர்மானித்திருப்பதால் கூட்டுறவுச் சங்கங்கள் தமது கடந்த காலத்தவறுகளை உணர்ந்து திருத்தி சிறந்தமுறையில் பொதுமக்களுக்குச் சேவை செய்ய முன்வரவேண்டும். அரசியலுக்கோ ஊழல்களுக்கோ கூட்டுறவுச் சங்கங்கள் இனியும் இடமளிப்பதாயின் அதன் வளர்ச்சி குன்றிவிடும். கூட்டுறவு இயக்கம் சிறப்புற முன்னேறுவதற்கு இதுபோன்ற ஆய்வு வகுப்புக்கள் வழிகாட்ட வேண்டும்.

## "கம்பராமாயணத்தை இலக்கிய நோக்குடன் அணுகவேண்டும்

### அதில் பல ராஜதந்திரங்கள் உண்டு"

உடுப்பிட்டி, ஞாயிறு

"உலகிலே பாவங்கள் அதிகரித்தமையினாலும் இலங்கைவேந்தன் ஸ்ரீ இராவணனுடைய கொடுமைகளை ஒழிக்க வேண்டியிருந்தமையாலும் திருமாலானவர் இராமனுடைய அவதாரமாக வந்து உதித்தார். நாராயணன் என்பதிலுள்ள 'ரா' என்ற எழுத்தும் "நமசிவாயம்" என்பதிலுள்ள 'ம' என்ற எழுத்தும் சேர்ந்து 'ராம' என்ற சக்தி வாய்ந்த நாமமாக அமைந்தது. கம்பராமாயணம் நமக்குப் போதிக்கும் ராஜதந்திரங்கள் அதிகம், எதிர்காலத்தேசத்தலைவர்கள் இவற்றைப் பின்பற்ற வேண்டும்". இவ்வாறு முத்தமிழ்மணி வண்ணை ஸ்ரீ என். என். மணிபாகவதர் கெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய கொடியேற்ற வைபவத் தினத்தில் 'பால காண்டம்' என்னும் விடயம் பற்றி சொற்பொழிவாற்றுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

வசிட்டமுனிவர் மிகவும் கெட்டிக்காரர். ஜே. எஸ். சி. வகுப்பு படிக்கும் பண்ணியனும் பையனைக் கட்டிக்கொடுத்தால் அவன் தற்பெருமையில் சிலவேளை ஜி. சி. ஈ. பரீட்சையில் தவறிவிடுவான். அதுபோலவே ஆரம்பத்தில் தனது வில்லின் திறனால் அரக்கியான தாடகையைக் கொன்ற போதும் பின்னர் தமதுயாகத்தைக் கண்ணை இமை காப்பது போலக் காத்தபோதும் இராமனைப் பாராட்டாத வசிட்டர் மிதிலை நோக்கிச் செல்லும்போது பெண்மைக்குரிய கற்பெனும் திண்மை இழந்ததால் கௌதம முனிவரால் சபிக்கப்பட்டுக் கரும்கல்லாகக் கிடந்த அகலியை அவனது கால் தூசு பட்டு எழுந்து நின்றதைக் கண்டதும் "கைவண்ணம் தாக்கி போரில் மழை வண்ணத் தண்ணலே......உன் கைவண்ணம் அங்கு கண்டேன்...... கால் வண்ணம் இங்குக் கண்டேன்" என்று பாராட்டிக் கட்டித் தழுவுகிறான்.

மிதிலைச் செல்வியான சீதை தனது அரண்மனை மேல்மாடியில் நின்று தெருவில் வந்து கொண்டிருந்த இராமனை நோக்குகிறாள். இராமனும் நீண்ட நேரம் நோக்குகிறான். அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் பெண்மையின் இத்தகைய உணர்ச்சிகளைக் கம்பன் தமிழ்ப்பண்பாட்டிற்கேற்ப வால்மீகியின் கருத்துக்களினின்றும் மிகவும் வேறுபடுத்திச் சிறப்பாகக்காட்டுகிறான்.

கௌதம முனிவரின் மனைவி அகலிகை, கணவன் உருவில் வந்த இந்திரனைக் கணவன் என நினைத்தே சுகமனுபவிக்க உடன்பட்டாள் என்றும் அவள் மீது குற்றமில்லை என்றும் சிலர் வாதாடலாம். ஆனால் வந்திருப்பவன் இந்திரன் என்று தெரிந்தபின்பே அவனுக்கு இடங்கொடுத்தாள் என்று தான் கம்பர் கூறுகிறார். இல்லாவிடில் கௌதமர் அவளைச் சபித்திருக்க நியாயமில்லை. இலக்கியக் கண்ணோட்டத்துடன் கம்பராமாணத்தை நோக்கவேண்டும். அப்போதுதான் அதன் பெருமைதெரியும்.

## ஈழம் தந்த இன்கலைச் செல்வன்

புல்லிடை பொழிலிற் பூவிற்
பொற்கையிற் பொலிந்த ஆற்றின்
கல்லிடை மலையிற் கானில்
கழனியிற் கதிரில் தோப்பில்
எல்லையிற் கடலில் வானில்
இரவியில் மதியில் மீனில்
சொல்லருஞ் கருதி சாலுந்
தூயனும் இறைவன் உள்ளான்.

கடவுளை ஒப்ப சன்னுற்
காணிட்ற் கரிய வாகி
இடமெலாம் எழிலோ டின்பம்
ஈந்திடும் கலைகள் கோடி
அடங்கியே அமைந்த உண்மை
ஆய்ந்தறிக் தவனி க்காணப்
படைப்பவன் கலைஞன் அந்தப்
படைப்பிலே உயர்ந்து வாழ்வான்.

ஓங்கிய மலையின் கல்லை
உடைத்ததை உளியி னாலே
பாங்குறச் சிலைய தாக்கிப்
படைப்பவர் பசும ரத்துள்
தேங்கிய கலையை மர்ஞர்
தெரிந்திடப் படிவ மாக்கி
ஈங்கவித் துவப்போ ரெல்லாம்
இன்கலைச் செல்வ ராமே

பொற்பமை தேர்கள் பாயும்
புரவிகள் கிளிகள் சூரன்
அற்புத மலைகள் எல்லாம்
அரியசாத் திரஞா னத்தில்
முற்றிய முதிர்வால் ஆறு
முகமெனும் ஈழ நாட்டு
விற்பனன் படைத்தான் அக்க
வித்தையால் வில்லே ஞனன்

கற்றவர் மதிக்க மற்றைக்
கலைஞர்கள் துதிக்க என்றும்
அற்றமில் அறிவி னாலும்
அனுப வமுதாச்சி யாலும்
பெற்றிகள் பெற்றன் செம்மான
பெருமையைப் பெருநி லத்தில்
முற்றுற விளங்க வைகுடும்
முழுக்கலை வாழ்வு கண்டான்.

— இ. நாகராஜன்

## இனத்தின் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### சம அந்தஸ்திலிருந்து வித்தியாசமில்லை

கிடைக்கக்கூடிய சகாயங்களைக்கூடக் கிடைக்கவிடாது வட்டமேசை மகாநாட்டில் குழப்பியடிக்கச் சிலர் முயற்சி செய்கின்றனர், வட்டமேசை மகாநாட்டு முடிவு மாற்றப்பட முடியாதாவென உத்தரவாதம் உண்டா? 1944ல் தமிழும் சிங்களமுமே அரசாங்க மொழியென்று தீர்மானித்தது. இன்று எப்படியானது தமிழ் மொழியும் ஆட்சிமொழியென அன்று கூறிய திரு. பண்டாரநாயக்கா பின் அதை மாற்றிக் கூறி மறுக்கவில்லையா? வட்டமேசை மகாநாடு பிரச்னையைப் பின்போடவும் முடியும். இப்போதுள்ள தேசிய அரசாங்கமும் காலஞ்செல்லத் தனது நிலையை ஏன் மாற்றக் கூடாது? ஆகவே சில மாதங்களுக்கிடையே எமது உரிமைகளை நாம் ஓரளவேனும் பெற்றேயாகவேண்டும், தமிழ் மொழியையும், தமிழினத்தையும் ஒதுக்கிவிட நாம் இடமளிப்போம், பேச்சிலே சம அந்தஸ்தென்று சொல்வதற்கும் நாம் பெறப்போவதற்கும் அதிக வித்தியாசமில்லை என்பது காலப்போக்கில் தெரிய வரும்.

### ஒத்துழைக்க தயார்

நாம் ஒற்றுமையை விரும்புகின்றோம். தேசிய அரசாங்கத்தில் இரண்டாவது பெரிய கட்சியாகிய எம்முடன் சேர வரும்படி அழைக்கின்றோம். நாம் ஒற்றுமையை விரும்புவதாயின் முதுகில் குத்தவல்ல. இனத்தின் நல்வாழ்வுக்காக நாம் எலாத் தமிழ்மக்களுடனும் ஒத்துழைக்க ஆயத்தம். தமிழரசுக் கட்சி என்ற பெயரையும் சமஷ்டி என்ற எமது இலட்சியத்தையும் விட்டுவிடும்படி கோருவது எமது இலட்சியத்தைக் கேலிசெய்வதாகவே முடியும். நாம்இலட்சியப் பாதையில் முன்வைத்த காலை பின்வையோம். அதே நேரத்தில் மற்றவர்கள் முன் ஒருவரை ஒருவர் காட்டிக்கொடுக்கவும் மாட்டோம்.

சம்பிரதாயப்படி குத்துவிளக்கேற்றி காரியாலயத்தை பருத்தித்துறை எம். பி திரு க துரைரத்தினம் திறந்து வைத்து உரை நிகழ்த்தினார். "தமிழ் பேசும் மக்களுக்கு இது சோதனை நிரம்பிய காலம். உள்நாட்டு வைபவங்கள் இதைக் காட்டுகின்றன. எமக்கு காரியமேயொழியச் சிலு சிலுப்புத்தேவையில்லை. கண்டபடி வாயைக் கொடுத்தால் வருவது கூட வராதுபோகலாம். சிங்கள மக்களுக்கு சிங்களம் எப்படியோ தமிழ்பேசும் மக்களுக்குத் தமிழ் அப்படியே. இதையே நாம் வலியுறுத்துகிறோம், இன்றைய சூழ்நிலையில் பெறக்கூடியதைப் பெற வேண்டும், பண்டா-செல்வா ஒப்பந்தம் போல வந்துவிடக் கூடாது. பேச்சுவார்த்தைகளை ஒப்புக்கொண்ட பிரதமர் அதை வெளியிட இது தருணம் அல்ல என்றார். வட்டமேசை மகாநாடுதற்போதைய சூழ்நிலையில் பயன்தராது என ஜனநாயகக் காங்கிரஸ்தலைவர் திரு: அசீஸ் எம்மிடம் கருத்துத் தெரிவித்திருக்கிறார்" என்று திரு துரைரத்தினம் கூறினார்.

வழக்கறிஞர் திரு. சி. வல்லிபுரம் கட்சியின் மூவர்ணக் கொடியை ஏற்றி வைத்து உரை நிகழ்த்துகையில் இன்றைய நல்ல சூழ்நிலையைப்பயன்படுத்தி மகாவலி கங்கையை வடக்கே திருப்பமுயற்சி எடுக்கவேண்டும் எனவும் நீ வளம் கிடைத்தால் நிலவளம்தானே உயரும் எனவும் கூறினார்.

திரு. மு. ச. அருணாசலம் முதலான வேறுபலரும் பேசினர்.

எங்கும், எல்லா இடமும் நிறைந்திருக்கின்ற இறைவனைத் துதித்து இதயத்தூய்மைபெற வேண்டுமெனபதே எல்லாச்சமயமும் எமக்கு இடும் கட்டளை.

சர்வவல்லமை பொருந்த இறைவனின் அலகிலா விளையாட்டை, அவனது திருக்கூத்தை புராண இதிகாசங்களிற் படிக்கின்ற சைவமக்கள் அத்திருவிளையாடலை தரிசன விழிகளாலகாண்பதற்கு உறுதுணை செய்பவர்கள் சிற்பிகள். கல்லிலும், மரத்திலும் கலிலுற அவர்கள் செய்த படிவங்கள் காலத்தை எதிர்நீச்சலடித்து எக்காலத்தும் இலங்கி இறைவனின் அளவற்ற—ஆக்க பூர்வமான—செயலை ஒப்புகின்றன. இச்சிற்பக்கலைஞர்களே பண்டுதொட்டு இன்றுகாறும் கலை, பண்பாடு, ஆசாரம் ஆதியனவற்றைப் புகட்டி நிற்கின்றது.

மனிதவாழ்விலும் அற்பமாகிலும் அன்னார் தம் கலைசிருஷ்டிகள் அவர்களதுபெருமையான வாழ்க்கையை அலகிலா இறைவனைப்போல் அழியாதுகாத்து நிற்கின்றன.

இத்தகைய கலைஞர் வரிசையில் ஈழம்தந்த இன்கலைச்செல்வனாக விளங்குபவர் யாழ்ப்பாணம் திருநெல்வேலி வேலபதியில் வாழ்ந்து — கடந்த 1964ம் ஆண்டுஜூன் மாதம் 7-திகதி அமரர் உலகு எய்திய சிற்பாசாரியார் திரு. வி. ஆறுமுகம் அவர்கள்.

யாழ்ப்பாணம் வீரமாகாளியம்மன் கோவில்தேர், குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்தேர், நல்லூர்க்கைலாசவாகனம்ஆகியன அவரது உயர்ந்த சிருஷ்டிகளுக்கு உதாரணமாக விளங்குகின்றன.

இணுவில் அம்மன் கோவில் சூரன், நல்லூர் கைலாசபிள்ளையார்கோவிற கயிலாயவாகனம், மாவை கந்தன் குதிரை வாகனங்கள் எல்லாம் அவரதுகுன் ஒக்கலையின் சின்னங்கள். ஈழத்தின் பலபகுதிகளிலு முள்ள ஆலயங்களிலெல்லாம் அவரது வாகன சிருஷ்டிகள் மிளிர்கின்றன.

கடல்கடந்தநாடுகளிலும்அவரது சிருஷ்டிகளிற் சில இடம் பெற்றுள்ளன. தொன்றுதொட்டு பரம்பரையாக வந்தகலைத் திறனும் தென்னிந்தியாவில் சு தனிகமுறையிற் பெற்ற அறிவும், முதிர்ந்த அனுபவமும் பெற்றுச் சித்தாந்த கலைஞராக இப்பெரியார் விளங்கினார்.

[அவரது முதலாவது சிராத்ததினம் (7—6-65) இன்று நடைபெறுவதையிட்டு இங்கு பிரசுரிக்கப்படுகின்றது இவை.]

# சாஸ்திரி-ஸ்ரீமா ஒப்பந்தம் திருத்தப்பட வேண்டும்

## கட்டாயமாக அனுப்பும் திட்டம் கைவிடப்பட வேண்டும்

### சுதந்திரக்கட்சி தேசியகமிட்டி தீர்மானம்

சென்னை, ஜூன் 6

கடந்த வருடத்தில் இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கும் இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரிக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட இலங்கை—இந்தியர் ஒப்பந்தம் திருத்தப்பட்டு இலங்கை வாழ் இந்தியர்களின் நலன்களைப் பாதுகாக்க தற்பொழுது பதவியிலிருக்கும் தேசிய அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்.

சுதந்திரக்கட்சியின் தேசிய கமிட்டிக் கூட்டம் நேற்று சென்னையில் நடைபெற்றபொழுது மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### கட்டாயம் கூடாது

இலங்கை வாழ் இந்தியர்களைத் திருப்பி அனுப்புவதில் "நிர்ப்பந்த ஏற்பாடுகள்" எதுவும் மேற்கொள்ளக்கூடாது. கட்டாயஅடிப்படையில் அவர்களைத் திருப்பி அனுப்பும் முறை கைவிடப்படவேண்டும் என்றும் சுதந்திரகட்சியின் தேசியகமிட்டி கோரியுள்ளது.

"இலங்கை வாழ் இந்தியர்கள் தாமாக விரும்பினால் தவிர அவர்களைப் பலவந்தமாக அனுப்பக்கூடாது. இந்தியா திரும்புவதற்கு விரும்பும் இந்தியர்களை எத்தவித கஷ்டமுமின்றி அனுப்பிவைக்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இலங்கை வாழ் இந்தியர்களின் பிரச்னையை இலங்கை அரசாங்கம் மனிதாபிமானத்துடன் நோக்கவேண்டுமென்றும் இக் கமிட்டி தீர்மானித்துள்ளது.

---

தென்வியட்நாமில்

## அரசாங்க துருப்புகளுக்கு அதிக சேதம்

### மூன்று பகுதிகளில் கடும்சண்டை

சைகோன், ஜூன் 6

தென்வியட்நாமின மூன்று பகுதிகளில் நேற்று வியட்காங் கொரில்லாக்களுக்கும் தென்வியட்நாம் அரசாங்க துருப்புகளுக்குமிடையே கடுமையான சண்டை நடைபெற்றது. மத்திய தென்வியட்நாமில் நேற்று நடைபெற்ற சண்டையில் 21 அரசாங்க துருப்புகள் மாண்டனர், அரசாங்க துருப்புகளுக்கே அதிக சேதம் ஏற்பட்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்று கிராமங்களை வியட்காங் கொரில்லாக்கள் தாக்கினர் என்று செய்திகள் கூறுகின்றன.

மற்றுமொரு பகுதியில் நடைபெற்ற தாக்குதலிலும் அரசாங்க துருப்புகளுக்கு அதிக சேதம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

**அமெரிக்க விமானங்கள்**

வடக்குவியட்நாமில் நேற்றும் நேற்று முன்தினமும் அமெரிக்க, தென்வியட்நாம் விமானங்கள் பெருமளவில் தாக்குதல்கள் நடத்தின, ஆறு டிரக்குகளையும் சில பாலங்களையும் விமானங்களையும் சேதப்படுத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலின்போது மூன்று அமெரிக்க விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாக ஹனோய் வானொலி அறிவித்துள்ளது.

**"ஆக்கிரமிப்புக்கு அடிபணிவதில்லை"**

வியட்நாம்பற்றிய அமெரிக்க கொள்கையை அமெரிக்க ராஜாங்க காரியதரிசி திரு டீன் ரஸ்க் நேற்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார். "அமெரிக்காவின் கொள்கையில் மாற்றம் இல்லை. ஆக்கிரமிப்புக்கு என்றும் அடிபணியமாட்டோம்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

---

## லண்டன் மாநாட்டில் கட்ச் தகராறு?

### இந்தியா எதிர்க்கலாம்

லண்டன், ஜூன் 6

லண்டனில் ஆரம்பமாகும் காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் கட்ச்-ரன் தகராற்றை பாகிஸ்தான் கொண்டு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் இதற்கு இந்தியா முழு எதிர்ப்புக் காட்டும் என இந்திய வெளிநாட்டு இலாகா அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு இம்மாதம் 17-ந் திகதி இங்கு ஆரம்பமாகிறது. இம்மகாநாடு ஒருவாரகாலம் வரை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மகாநாட்டில் இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா உட்பட நான்கு நாட்டுப் பிரதமர்கள் கலந்துகொள்ள மாட்டார்கள். இலங்கையின் சார்பில் நீதிமந்திரி கலந்து கொள்வார்.

---

## சூவுக்கு பலத்த பாதுகாப்பு

தருஸ்ஸலாம், ஜூன் 6

தான்ஸானியாவின் நான்கு நாள் சுற்றுப்பிரயாணம் செய்யும் பொருட்டு நேற்று சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் இங்கு வந்துசேர்ந்தபொழுது அவருக்குப் பலமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

"ரோல்ஸ்ரோய்ஸ்" திறந்த காரில் சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் பிரயாணம் செய்தபொழுது ஏராளமான மக்கள் வீதிகளின் இருமருங்கிலும் குழுமி நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஆயுதம் தரித்த பொலிஸார் காவல் புரிந்து கொண்டிருந்தனர்.

---

## சட்ட தின விழாவில் தேசாதிபதி

பம்பலப்பிட்டி, ஞாயிறு

"சகலினதும் உரிமைகளை பாதுகாக்கும் சமூகத்தில் இன்று நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். அத்துடன் எங்கள் சட்டத்துறையில் நல்ல முறைகளைக் கையாண்டு நாம் நீதி பரிபாலிக்கும் முறையிலும் குறிப்பிட்ட சிறந்த விதிகளை பின்பற்றியுள்ளோம்" என தேசாதிபதி சுதந்திரசதுக்கத்தில் இலங்கை சட்ட சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற சட்ட தின விழாவைபவத்தில் பேசும்போழுது குறிப்பிட்டார்.

---

## தொடர்புகள் துண்டிப்பு

கார்டூம், ஜூன் 6

சூடான் தலைநகரமான கார்ட்டூமில் நெருக்கடி நிலவுவதாக செய்திகள் கூறுகின்றன.

தலைநகருக்கும் வெளியிடங்களுக்குமான சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்டு விட்டன. இந்த நடவடிக்கைகளுக்கான காரணம் அறிவிக்கப்படவில்லை,

---

## "தற்காலிகத் தீர்வு தமிழ் பேசும்மக்களுக்கு நன்மையல்ல"

### உடுப்பிட்டி எம். பி. பேச்சு

பருத்தித்துறை, ஞாயிறு

"சிறுபான்மையினரின் பிரச்னைகளுக்கு நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டும். தற்காலிகமான தீர்வுகளால் பிரச்னைகள் கூறுபோடப்பட்டு நிச்சயம் பாதிக்கப்படும். ஒவ்வோர் பாராளுமன்றக் காலத்திலும் தற்காலிக ஒப்பந்தங்களை செய்வதால் என்ன பயன்? இப்படியான தற்காலிகங்கள் எல்லாம் ஒருசிலர் தொடர்ந்து பாராளுமன்றம் செல்ல உதவுமேயொழிய இனத்தின் எதிர்காலத்தைப் பாதித்தே தீரும். இதுவிஷயத்தில் விழிப்புடன் செயலாற்ற வேண்டும். இதற்காகவே வட்டமேசை மகாநாட்டைக்கூட்டி பிரச்னைகளைத் தீர்க்க வேண்டுமென நாம் வற்புறுத்துகிறோம். ஐக்கிய தேசியக்கட்சியும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இக்கயோசனையைக் கூறியுள்ளது."

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரம் கரவை கத்தோலிக்க மக்கள் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் கூறினர்.

வதிரி திருஇருதயக் கல்லூரி மண்டபத்தில் காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆர்னல்ட் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு திரு. சிவசிதம்பரம் மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.

கத்தோலிக்க மக்களின் சார்பாக திருவாளர்கள் வ. இராசையா, என். அகஸ்ரீன், என். அந்தோனிமுத்து ஆகியோரும் பேசினர்.

நியாயவாதி திரு. எஸ். ஸ்ரீதரன் பேசுகையில், அரசியலில் நேர்மையும், சேவையும், பண்பும் நிறைந்த சிவசிதம்பரம் நீடு வாழவேண்டுமென வாழ்த்தினர்.

---

## அரசியல் நெருக்கடி தீரவில்லை

சைகோன், ஜூன் 6

தென்வியட்நாமில் நிலவும் அரசியல் நெருக்கடி இன்னும் தீரவில்லை என்று செய்திகள் கூறுகின்றன.

---

## பாடசாலை பஸ்சேவை

யாழ்ப்பாணம், திங்கள்

புதிய பஸ்கள் வந்ததும் பள்ளிக்கூட பஸ் சேவைகள் நல்ல நிலையை அடையுமெனவும் பொதுவாகப் பஸ் சேவையில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படுமெனவும் வலி மேற்கு காரியாதிகாரியின் மாவட்ட இணைப்பு குழுவின் கூட்டத்தில் இ. போ. ச. அதிகாரிகுருந்து தெரிவித்தார்.

மாவட்ட இணைப்பு குழுக் கூட்டத்திற்கு வலி-மேற்கு காரியாதிகாரி திரு டி. பியூஸ். செல்வரத்தினம் தலைமை வகித்தார்.

சங்கானையில் உள்ள அரசினர் ஆஸ்பத்திரிக்கு பல் வைத்திய உபகரணங்கள்பெற வேண்டும் என்றும் இதுபற்றி சுகாதார இலாகா வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இளவாலை மருந்துச்சாலையை ஓர் மத்திய மருந்துச்சாலை ஆக்கவேண்டும் என்ற கோரிக்கையும் இணைப்பு குழுவினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

விற்பனை இலாகா சங்கானையில் ஓர் மரக்கறி விற்பனை செய்யும் கடையொன்றினை திறிக்கவேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

---

## குறைபாடுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் தச்சுத்தொழிலாளர் தொழிற் சங்கத்தின் சார்பில் செயலாளர் திரு. அ. த. அருணாசலம், திரு. ஆர். செ. பத்மநாதன் ஆகியோர் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கத்தைச் சந்தித்து தங்கள் குறைபாடுகளை விளக்கிக் கூறினர்.

சுன்னாகம் தச்சுத்தொழிற்சாலையின் குறைபாடுகளை விளக்கிய இவர்கள், கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் பொழுது அவரிடம் எடுத்துக் கூறி அவற்றைத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்குமாறு திரு. தர்மலிங்கத்தை கேட்டுக் கொண்டனர்.

---

## விண்வெளி வீரர்கள் இன்று அட்லாண்டிக் கடலில் இறங்குவர்

### பூமியின் முக்கிய பகுதிகளைப் படம்பிடித்தனர்

ஹூஸ்டன், ஜூன் 6

'ஜெமினி' விண்வெளிக் கப்பலில் பூமியை வலம்வந்துகொண்டிருக்கும் அமெரிக்க வானவெளி வீரர்கள் நாளை திங்கட்கிழமை அட்லாண்டிக் கடலில் வந்திறங்குவார்களென அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைத்த தகவல்களின்படி, இரு அமெரிக்க வானவெளி வீரர்களும் 43 தடவைகள் பூமியை வலம்வந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

அமெரிக்க இரு வானவெளி வீரர்களான மேஜர் வைட்டும் மேஜர் ஜேம்ஸ் மைக்டிவைட்டும் தங்களது விண்வெளி யாத்திரையில் பாதி தூரத்தை முடித்துவிட்டனர், மொத்தம் 62 தடவைகள் இவர்கள் பூமியை வலம்வருவார்கள் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

வானவெளி வீரர்களின் இருதயத்துடிப்பு, இரத்தத் துடிப்பு ஆகியவற்றைப் பூமியிலிருந்து பரிசோதனைசெய்யும்வெளிப் பிரயாணங்களை எந்தப் டாக்டர்கள் நேற்று விடுத்த அறிக்கையில் எந்தவித மாறுதலும் ஏற்படவில்லையென்றும் சாதாரண துடிப்பே காணப்படுகிறதென்றும் தெரிவித்துள்ளனர்.

நேற்று இவர்கள் விண்வெளிக் கப்பலில் இருந்தவாறே பூமியின் முக்கிய பகுதிகளைப் படம்பிடித்தனர். அவர்கள் தொடர்ந்து படமெடுத்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் விண் இடத்தில் ஆரம்பிக்கலாமென்பதைத் தெரிவுசெய்வதில் இப்புகைப்படங்கள் துணை புரியுமென அறியப்படுகிறது.

வானவெளி வீரர்கள் ஐந்து நாள்வரை பிரயாணம்செய்வார்கள் என்று வெளியான செய்தியை மறுத்த அமெரிக்க வானவெளி ஆராய்ச்சி அதிகாரிகள் நான்கு தினங்கள் மட்டுமே அவர்கள் யாத்திரை செய்வார்களென்று அறிவித்தார்.

## மந்திரியின் விளக்கம்

ஹண்டுகல, ஞாயிறு
இப்போது வழங்கப்படும் அரிசி பற்றி சமசமாஜிகள் குறைகூறி வருகிறார்கள். இந்த அரிசி தற்போதுள்ள அரசாங்கத்தினால் கொண்டுவரப்படவில்லை. சென்ற வருடம் செப்டம்பர் மாதத்தில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் மூலமே இந்த அரிசி இப்போது வழங்கப்படவேண்டியிருக்கிறது.

இவ்வாறு உணவு விவசாய மந்திரி திரு. எம். டி. பண்டா ஹண்டுகலையில் நடைபெற்ற வரவேற்புக்கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இந்த வருடம் இருபோக நெல் விளைச்சலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த வருட இறுதி வரை நாம் பச்சை அரிசியையே நம்பியிருக்கவேண்டியிருக்கிறது.

இவ்வித பிரச்னைகளையெல்லாம் நிவர்த்தி செய்வதற்கு உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கப்படவேண்டும்.

அரசியல் சச்சரவுகளை விடுத்து மக்கள் அரசாங்கத்துடன் தேசத்தின் நலனைக்கருத்திற்கொண்டு ஒத்துழைக்க வேண்டுமெனவும் மந்திரி குறிப்பிட்டார்.

## புகையிரத நேர அட்டவணை

சாவகச்சேரி, ஞாயிறு
ஒரு கமிட்டி நியமித்து புகையிரத பிரயாணிகள் சங்கத்தின் ஆலோசனையுடன் புதிய புகையிரத நேர அட்டவணையைத் தயாரிக்கும் வரை தற்போதைய புகையிரத நேர அட்டவணையை உபயோகிப்பது பற்றிய தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு தகவல் தொடர்புகள் மந்திரி திரு ஈ. எஸ். பி குருனே எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் கேட்டுள்ளார்.

பல பிரயாணிகளின் புகார்களைத் தொடர்ந்தே இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

## ஆசிரியர்களுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு
சென்ற புதன்கிழமை ஆசிரியர்களுக்கும் மாணவர் தலைவர்களுக்குமிடையில் கொக்குவில் இந்துக்கல்லூரி விளையாட்டரங்கில் சிநேகபூர்வமாக நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஆசிரியர்கள் 46 ஓட்டங்களால் மாணவர் தலைவர்களைத் தோற்கடித்தனர். ஆசிரியர்களில் சி. நாகலிங்கம், வி. கணேசலிங்கம், என். சிவராஜா, சி. பாலகிருஷ்ணன், தம்பிராஜன் ஆகியோரும் மாணவர் தலைவர்களில் எஸ். செல்வகுமார், வி. சண்முகநாதன், பி. விஜயேந்திரன், ஏ. சிறிகாந்தன் ஆகியோரும் திறமையாக விளையாடினார்கள்.

இப்போட்டிக்கு எம். எஸ். சிறிராகுலன், வி. என். ஜெயராஜா ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

# "சம அந்தஸ்துக்கு கிட்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது

## சமஷ்டி ஆட்சி அமைப்பே உரிமையுடன்வாழ வழிவகுக்கும்"

### தியாகிகள் தினக்கூட்டத்தில் திரு. செல்வநாயகம் விளக்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
"நான் முதன் முதல் சமஷ்டிபற்றி பேசியது திரு. பொன்னம்பலம் முன்னிலையில் தான். 1947-ம் ஆண்டு நான் தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்ற அங்கத்தவராக இருந்தபோது, இதே முற்றவெளி மைதானத்தில் காலஞ்சென்ற திரு சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சமஷ்டி பற்றிப் பேசினேன். அக்கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் இருந்தார்".

கோட்டை மைதானத்தில் நேற்றிரவு நடைபெற்ற தியாகிகள் தினக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. செல்வநாயகம் மேலும் கூறியதாவது:

அக்கூட்டத்தில் எனக்கு சகமில்லையென்றும் அதனால் பேச விரும்பவில்லையென்றும், வேறு பலர் பேச விருப்பதாகவும் நான் திரு. பொன்னம்பலத்திடம் கூறினேன், அதற்கு திரு. பொன்னம்பலம் உமது சமஷ்டிக் கோரிக்கை பற்றி இக்கூட்டத்தில் பேசாமல் வேறு எந்தக் கூட்டத்தில் பேசப்போகிறீர் என்று பதிலளித்தார். நான் அக்கூட்டத்தில் திரு. பொன்னம்பலத்தின் வேண்டுகோளின்படியே முதன் முதல் சமஷ்டி பற்றிப் பேசினேன். அக்கூட்டத்தில் நான் பேசியதை திரு. பொன்னம்பலமும் கேட்டுக்கொண்டிருந்தார்.

இன்று திரு. பொன்னம்பலம் சமஷ்டிக் கோரிக்கையை கைவிடும்படி ஆலோசனை கூறினர். அவர் கூறும் இலவச ஆலோசனையை நாங்கள் முற்றாக நிராகரிக்கிறோம். இரு மொழிகள் பேசப்படும் நாட்டிற்கு சமஷ்டி முறையே சிறந்த ஆட்சியைக் கொடுக்கும்.

### சமஷ்டி முறையால் நன்மையடைந்தனர்

கனடாவில் சமஷ்டி ஆட்சி முறையை மக்கள் வெறுக்கிறார்கள் என்று சமீபத்தில் திரு பொன்னம்பலம் கூறியுள்ளார். கனடாவில் பிரஞ்சுமொழி பேசும் மக்கள் சமஷ்டி முறையால் தங்கள் மொழியைப் பாதுகாத்துள்ளார்கள். இப்பொழுது அவர்கள் தங்கள் மாகாணத்தைத் தாங்களே ஆளவேண்டும் என்று விரும்புகிறார்கள். அவர்கள் சமஷ்டி ஆட்சிக்குப் பதில் ஒற்றை ஆட்சி கேட்கவில்லை, அவர்கள் சமஷ்டி ஆட்சி முறை போதாதென்று, சமஷ்டியை விட்டுவிட்டு தனியாட்சி கோரி வருகிறார்கள். ஆனால் திரு. பொன்னம்பலமோ, அவர்கள் சமஷ்டி ஆட்சிக்குப் பதில் ஒற்றையாட்சி கேட்கிறார்கள் என்று கூறி வருகிறார்.

பெல்ஜியத்திலும் இரு மொழி பேசும் மக்கள் வாழ்கிறார்கள். அங்கே உள்ள மொழிப்பிரச்னையை சமஷ்டி ஆட்சி மூலமே தீர்க்கலாம் என்று அரசியல் வாதிகள் கருதினார்கள். இந்த திட்டம் இதுவரை சட்டமாக்கப்படவில்லை இத்திட்டத்தை அடிப்படையாக வைத்து தேர்தல் நடத்தினார்கள் இத்திட்டத்தை பாராளுமன்றத்தில் சட்டமாக்க மூன்றில் இரண்டு பங்குபேர் வெற்றிபெற வேண்டும் இத்திட்டம் நிறைவேற பெல்ஜியம் பாராளுமன்றத்தில் 122 அங்கத்தவர்கள் இருக்கவேண்டும் சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில் 121 அங்கத்தவர்களே வெற்றி பெற்றார்கள் ஒருவர் தோற்றபடியால், அத்திட்டத்தை சட்டமாக்க முடியாமல் போய்விட்டது ஆனால் 121 அங்கத்தவர்களும் அத்திட்டத்தைச் சட்டமாக்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

### சமஷ்டியும் பிரதேசசபைகளும்

இன்றைய சூழ்நிலையில் சமஷ்டி ஆட்சிமுறையை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையினால் பிரதேச சபையை ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம் பிரதேச சபைகள், சமஷ்டி கோரிக்கைக்கு சமம் என்று நாங்கள் கூறவில்லை. ஆனால், பிரதேசசபைகள் மூலம் நமது பகுதிகளை நாங்கள் ஆளவசதியளிக்கப்படும். பிரதேசசபைகளை அமைக்க அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. இதனால் எங்கள் பகுதிகளில் உள்ள பல விஷயங்களை நாங்களே கையாளலாம்.

இன்றைய நிலையில் எமக்கு எந்த உரிமையும் இல்லை, சில உரிமைகள் கிடைக்கக் கூடிய நிலை தற்பொழுது ஏற்பட்டுள்ளது. பிரதேச சபையைப் பெறுவதற்கு முட்டுக்கட்டைபோடவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழர்களின் பிரச்னைகளில் தமிழ்பிரதேசத்தை காப்பாற்றுவதுதான் முக்கியமானது இன்று நாங்கள் தமிழ்பேசும் இனமாக வாழக் காரணம், நமக்கென்று ஒரு பிரதேசம் இருப்பதுதான். வடக்கு கிழக்கு மாகாணங்களை, தமிழ் மாகாணங்களாக வைத்திருப்பது நமது கடமையாகும் அப்படி வைத்திருப்பதற்கு பிரதேச சபை உதவியாக இருக்கும்.

பிரதேச சபைகள் மூலம், உரிமைகள் அத்தனையும் பெற்றுவிட்டோம என்று கூறவில்லை, நமது பகுதியை நாமே ஆளமுடியும். அடுத்த முக்கிய பிரச்னை மொழிப்பிரச்னை.

இன்று இருக்கும் சட்டத்தின்படி, அகில இலங்கையிலும் தனிச்சிங்களம் தான் இருக்கவேண்டும். இன்றுள்ள சட்டப்படி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, மன்னார், வவுனியா கச்சேரிகள் தனிச் சிங்களத்தில் இயங்க வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ளது.

எங்களின் தியாகங்களினால் வடக்குகிழக்கு மாகாணங்களில் தமிழ் அரசகருமமொழியாகவிருக்கின்றது. அதுடன் மற்றும் 7 மாகாணங்களில் தமிழ்பேசும்மக்கள் அரசாங்கத்துடன் தமிழில் தொடர்புகொள்ள அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது இவை சமஅந்தஸ்திற்கு கிட்டிய நிலைமை என்பதை எவராலும் மறுக்க முடியாது. தமிழ்பேசும்மக்கள் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட நாம் இப்படியான நிலையை ஏற்றுக்கொள்ளவிரும்புகிறோம். 14 பிரதிநிதிகளும் ஓரேகட்சியின் கீழ் சென்றபடியால்தான் இந்த நிலை ஏற்பட்டது. அதனால்தான் திரு. டட்லியுடன் சேர்ந்து, தேசியஅரசாங்கம் அமைக்ககூடியதாக விருந்தது.

## ஏதன்ஸில் ஸாகீர்

ஏதன்ஸ், ஜூன் 6
கிரீஸ்நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்யும்பொருட்டு இந்திய உபராஷ்டிரபதி டாக்டர் ஸாகீர் ஹுஸைன் நேற்று ஏதன்ஸ் வந்து சேர்ந்தார்,

கடந்த ஒன்பது ஆண்டு காலமாக பட்ட கஷ்டங்களினாலும், தியாகங்களினாலும், சிங்களமக்கள் மத்தியில் ஓரளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது.

## ரண சிகிச்சை கருவி உற்பத்தி

சென்னை, ஜூன் 6
சென்னையில் ரஷ்ய உதவியுடன் நிறுவப்பட்ட ரண சிகிச்சைக் கருவி உற்பத்தி தொழிற்சாலை அடுத்தமாதம் உற்பத்தியைத் தொடங்கும்.

## இன்று

துணுவில் பின்னைபார் கோவில் நான்காம் திருவிழா உற்சவம் இன்றுநடைபெறும். "தமிழ்மணி" எஸ். கணேசசுந்தரன் 'கணபதி அருள்பெற்ற காரிகை' என்னும் விடயம் பற்றி கதாப்பிரசங்கம் செய்வார். விசேஷ பூசைகளும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## 5000 பேருக்கு துப்பாக்கிப் பயிற்சி

புதுடில்லி, ஜூன் 6
கட்சில் ஐயாயிரம்பேருக்கு துப்பாக்கி சுடுவதற்கான பயிற்சி அளிக்க இந்திய அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### திங்கள் 7-6-65

### கொழும்பு

(செய்திகள் காலை 7-15 பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதம்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.


மாலை 5-00 பிறந்தின வாழ்த்துக்கள், 5-15 இசைத்தட்டு சங்கீதம், 5 45 திரை இசை

இரவு 6-15 கிராமாஞ்சிகை, 6-45 வினா, 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 தமிழ் மூலம் சிங்களம், 9-45 நேயர்விருப்பம், 10-15 எங்கள் விருப்பம்.

ஒரு பிரபலமான
டுப்பிளிகேட்டறின்
பிரபலமான மொடல்
சகாயமானவிலைக்கு உண்டு

REX-ROTARY

M2



எம்2 — விசேஷ அம்சங்கள்

காகிதங்கள் வைக்கும் பெட்டியில் 250 காகிதங்கள் வைக்கலாம், தபால் அட்டையிலிருந்து முழு அளவுக் காகிதம் வரையான எந்த அளவுள்ள காகிதத்திலும் பிரதிகள் எடுக்கலாம்.

உயரம், ஓரம் ஆகிய நிர்ணயங்களை இலகுவில் செய்யலாம், விரும்பிய விதத்தில் ஒழுங்கு செய்யக்கூடியது. ஸ்டென்சில் வெட்டுகள் செய்யக் கூடிய வகையில் சரி செய்யலாம்.

கௌண்டரில் நான்கு இலக்கங்கள் உண்டு. விரும்பினால், ஒற்றைக் கணக்கை மாற்றி சைபர் ஆக்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது. இது எடுக்கும் பிரதிகளின் எண்ணிக்கையைச் சரியாகக்கணக்கிடுகிறது. இயந்திரம் இயங்காதிருக்கும்போது டிரமின் சுழற்சிமுறை மாற்றும் பொறி சுழற்சி எண்ணிக்கைகளை இது கணக்கிடுவதில்லை.

இத்தனை சிறப்பு வாய்ந்த அம்சங்களுடன் கூடிய எம்—2 இன் விலை குறைவானதே. பாவிக்கும்போதும் அதிக செலவு ஏற்படுவதில்லை, இதனால்தான் எம்—2 இன் விலைக்கு அது விரைவில் நல்ல சேவைபுரிகிறது.

எம்—2 மாற்றிய இன்னும் அதிகம் கூறலாம், உங்களுக்குக் கஷ்டமின்றி எவ்வளவுதூரம் அது சேவை செய்யும் என்பதை நீங்கள் அறிய வேண்டும். தொலைபேசி மூலம் அல்லது கடிதம் மூலம் எம்முடன் தொடர்புகொண்டால், எம்—2 வேலை செய்யும் விதத்தை உங்களுக்கு உங்கள் காரியாலயத்திலேயே காண்பிப்பதில் மகிழ்ச்சியடைவோம்.

விரைவில் இறக்குமதி செய்யப்படவிருக்கிறது.

ஆபீஸ் இக்கியுப்மெண்ட் லிமிட்டெட்
(OFFICE EQUIPMENT LTD.)

ஐலண்ட் கட்டிடம்,
கொழும்பு—3.
தொலைபேசி: 6168
தந்தி: ஆபீஸ் எமிட்ஸ்

ஜலதோஷமா?
உடனடி நிவாரணத்திற்கு
இன்றே
உங்கள் வியாபாரியிடம் வாங்கிப் பாவியுங்கள்!

அருத எண்ணெய்

அறுபசாம் பச்சை எனும் தமிழ் மூலிகையும்
வேறு 44 ஆயுர்வேத மூலிகைகளும் சேர்ந்தது.
கண் — தலை — காது — மூக்கு
சம்பந்தப்பட்ட சகல வியாதிகளுக்கு சாலச் சிறந்தது!
—சிறுவர் முதல் பெரியோர்வரை பாவிக்கலாம்—
தயாரிப்பாளர்:
பி. எம். திசாநாயக்க
அருத எண்ணெய் தொழிலகம், கம்பளை. போன்: 454
யாழ்ப்பாணத்திற்கு ஏகவிநியோகஸ்தர்கள்
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி: 541, 7068)

## விளம்பரம்

**S. R. S.**
**ஜவுளி மாளிகையில்**

சேலை ஒன்று
11-00 ரூபா
தொடக்கம்
பலவிலைகளில்
பெற்றுக்கொள்ள
நல்ல சந்தர்ப்பம்.

**லங்கா சேலைகளும்**
எமது
சொந்த கைத்தறியில்
தயார் செய்யப்பட்ட
**நெசவு சேலைகளும்**
ஏராளமாக
விற்பனைக்கு உள்ளன.

மொத்தமாக வாங்கும்
வியாபாரிகளுக்கும்
சங்கக் கடைகளுக்கும்
விசேஷ கமிஷன் உண்டு.

**எஸ். ஆர். செல்லத்துரை**
216, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 296.


## அறிவித்தல்

செல்வி மேரி இமெல்டா கபிரியேல்பிள்ளையின் 6951139 இலக்கம் கொண்ட காப்புறுதி காணமல் போய்விட்டது. இதைக் கண்டெடுத்தவர் அல்லது உரிமை கோருபவர் புருடென்ஷல் காப்புறுதிக் கம்பெனி, தபால் பெட்டி இலக்கம் 360, கொழும்பு 2,க்குத் தொடர்பு வைக்கவும்.

உரிமை கோருபவர் இன்று தொடக்கம் ஒரு மாதத்திற்குள் தொடர்பு கொள்ளத் தவறின் உரிமையை இழப்பார் என்பதையும் அறியத் தரப்படுகின்றது.

திருமதி கா. சிற்றம்பலம்
சென் தோமஸ்
ஆர். சி. பாடசாலை
பருத்தித்துறை. 404

# "எமது முயற்சிக்கு முட்டுக்கட்டை போடாமல் ஒதுங்கியிருக்கட்டும்

## தமிழரின் உரிமையைபெற்றுத்தர முன்வருவோரைபின்பற்றுவோம்"

### கிளிநொச்சி எம். பி. பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள் "தேசிய அரசாங்கத்திடம் நாம் தமிழினத்தின் உரிமைகளைப்பெறும் வரை தமிழ்க் காங்கிரஸ் தலைவர்கள் முட்டுக்கட்டை போட்டு குழப்பாமல் இருக்கட்டும். நாம் பெற்ற உரிமைகள் தமிழினத்திற்குப் போதாதென்றால் திரு. பொன்னம்பலம் அதன்பின் பெற்றுத்தரட்டும், சொல்லில் இல்லாமல் அவர் செயலில் காட்டினால் நாம் அவர் பின்னும் செல்லத் தயாராக இருக்கிறோம். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அரசகருமமொழி தமிழாக இருக்கும். அதேசமயம் மற்றும் ஏழு மாகாணங்களிலுள்ள தமிழ் பேசும் மக்களும் அரசாங்கத்துடன் தமிழ்மொழியில் தொடர்புகொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. இப்பொழுதுள்ள சூழ்நிலையில் இதைவிடக் கூடிய உரிமை பெறமுடியாது.",

யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் நேற்றுமுன்தினமிரவு நடைபெற்ற தியாகிகள் தினக்கூட்டத்தில் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

**தியாகத்தின் பயன் இது**

பண்டிதர் கா. பொ. இரத்தினம் மேலும் குறிப்பிட்டதாவது:-

தமிழ் உரிமை பெறுவதற்காகத் தங்கள் உரிமைகளையே தியாகம் செய்தவர்களின் தினமே இன்று. தமிழினம் இன்று இலங்கையில் சிங்கள மக்களால் மட்டுமின்றி உலகமக்களால் மதிக்கப்பட்ட இனமாக இருப்பதற்குக் காரணம் கடந்த காலத்தில் நாங்கள் பட்ட கஷ்டங்களும் தியாகங்களுமே. உலகின் பலபல நாடுகளில் பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தை நசுக்கி, அடக்கி, ஒடுக்கி வந்தபோதெல்லாம் சிறுபான்மை இனத்தவர்கள் செய்த தியாகத்தின் பயனாக அதே நாட்டில் இரு இனமும் சரிநிகர் சமானமாக வாழும் நிலை ஏற்பட்டுள்ளதை நாங்கள் அறிவோம். இந்நாட்டிலும் இப்படியான ஒரு நிலையை உருவாக்குவதற்குக் கடந்த ஒன்பது வருட காலமாக பல தியாகங்களைச் செய்திருக்கிறோம்.

இலங்கையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளும் உரிமை பெறவேண்டுமென்று கடந்த காலத்தில் நாம் கோரிக்கை எழுப்பிவந்தோம் இக்கோரிக்கைக்கு அவ்வப்போது மக்கள் செய்துவந்த தியாகங்கள் பக்கபலமாய் அமைந்தது. இதன் காரணமாக எங்கள் கோரிக்கை நிறைவேறக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. நமது பகுதியை நமது மொழியில் ஆள்வதற்கு அரசாங்கம் சம்மதித்துள்ளது. நமது முழு உரிமைகளையும் பெறமுடியாவிட்டாலும் அரசாங்கம் தரும் உரிமைகளைத் தற்போது நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

எனது தொகுதி பின்தங்கிய தொகுதி. அங்கு பற்பல முன்னேற்றத்திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும். பாடசாலைகள் ரோட்டுக்கள் எல்லாம் திறுவப்படவேண்டும். இவற்றை எல்லாம் நாம் மந்திரிகளிடம் கேட்டுத்தான் பெறவேண்டும் இதுபோல்தான் எமது உரிமைகளையும் அவர்களிடம் கேட்டுத்தான் பெறவேண்டும். இதுகல்லது இதுகெட்டது என்று சொல்லிச் செய்யும் அதிகாரம் எமக்கு இல்லை ஆதலால் அரசாங்கம் தரமுன்வரும் உரிமைகளை நாம் முதலில் பெறவேண்டும்.

தனிநாடு பெருதமுறையில் எங்களை நாங்களே ஆளவேண்டும். இதற்கு அரசாங்கம் ஒருவாறு சம்மதித்துள்ளது. இந்நாட்டில் தமிழினம் சரிநிகர் சமானமாக வாழவேண்டுமானால் அது ஒற்றையாட்சியின் கீழ்முடியாத காரியம்.

**உரிமையை விடமாட்டோம்**

எமக்கு சலுகைகள் தேவையில்லை, உரிமைகள் வேண்டுமென்பதற்காகவே கடந்த தேர்தலில் 75 வீதமானோர் நமக்கு வாக்களித்துள்ளார்கள். அவர்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை இழக்கச்செய்யக்கூடாது என்பதற்காக நம்மைத் தேர்ந்தெடுப்பினரோ அதற்காகவேபாடுபடுவோம் தமிழினம் உயிரைவிடுவார்களே யொழிய உரிமையை ஒருபோதும் விட்டுக்கொடுக்கமாட்டார்கள் என்பதைச் சிங்கள மக்கள் உணர்ந்துவிட்டார்கள்.

இரண்டு இனம் வாழும் நாட்டில் ஒற்றையாட்சி பயனளிக்காது. பெரும்பான்மையானவர்கள் நல்லவர்களாக காணப்பட்டாலும் அவர்களுள் சில வெறியர்கள் தோன்றி சிறுபான்மையினரை நசுக்கலாம் ஒற்றையாட்சி மூலம் நன்மை பெறலாம் என்று கூறுபவர்கள் இதைச் சிந்திக்கவேண்டும்.

**இந்தியாவில் மும்மொழித்திட்டம்**

இந்தியாவில் மும்மொழித்திட்டம் மூலம் மொழிப் பிரச்சினையைத் தீர்க்கமுடிவுசெய்யப்பட்டுள்ளது. அரசாங்கமொழியான இந்தியை தாய் மொழியாகக்கொண்டவர்கள் கூட மற்றும் ஒருதேசிய மொழியைக் கற்கவேண்டும். தமிழ் மக்கள் உத்தியோகத்திற்காக சிங்களம் படிக்கவேண்டுமென்றால் சிங்கள மக்களும் உத்தியோகத்திற்காக தமிழ் படித்தால் தான் சமத்துவம் நிலவும் இந்தியாவில் மும்மொழித்திட்டத்தின் மூலம் மொழிப்பிரச்சினைக்கு முடிவு காணப்பட்டதுபோல இங்கும் காணப்படவேண்டும்.

வட்டமேசை மகாநாடு பயனளிக்காது இம்மகாநாட்டிற்குப் பலரும் வந்து நிலைமையை இன்னும் மோசமாக்கிவிடுவார்கள், வட்டமேசை பற்றி ஐக்கிய தேசியக் கட்சியும், தருமதி சிறிமாவும் கூறினர்கள் ஆதலால் திரு. பொன்னம்பலம், புதிதாகஎதையும் கூறிவிடவில்லை.

**தியாகம் வீண்போகவில்லை**

தமிழரசுக்கட்சியின் பொதுக்காரியதரிசியும், வட்டுக்கோட்டை எம். பியுமான திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசும்போது கூறியதாவது:-

கடந்த ஒன்பது ஆண்டுகாலமாக தமிழ் மக்கள் பட்டுவந்த கஷ்டங்களும், தியாகங்களும் வீண்போகவில்லை. அவர்கள் நமது எதிர்கால சந்ததியினருக்காகத் தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணித்தார்கள், உயிரையே தியாகஞ் செய்தார்கள். ஒன்பது ஆண்டுகளுக்கு முன் பாராளுமன்றத்தில் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டதினம் காலிமுகமைதானத்தில் நடந்த சம்பவங்களை நாம் என்றும் மறக்கமுடியாது. சிங்கள வகுப்புவாதிகளால் தூண்டிவிடப்பட்ட காடையர்கள் வெறிநாய்போல், நமதுதொண்டர்கள் மீது பாய்ந்து தாக்கினர்கள். உதிரம் கொட்டுமட்டும் உதைத்தார்கள், கல்லடி பொல்லடி எல்லாவற்றையும் நமது தொண்டர்கள் ஏற்றுக்கொண்டார்கள். நமது தலைவர்கள் கூட அதே நேரத்தில் பல கொடுமைகளு

(6-ம் பக்கம் பார்க்க)


## கேள்விப் பத்திர விளம்பரம்

### ஏழாலை கிராமசபை

கற்பக விநாயகர் ஒழுங்கை வேலைக்கான கேள்விப்பத்திரம் எம்மால் 18-6-65 மாலை 3 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேற்படி வேலைக்கான கேள்விப்பத்திரம் 17-6-65 க்கு முன் பெறல்வேண்டும்.

கேள்விப் பத்திரப் பணம் ரூபா 5/-

கேள்விப்பத்திரப் பிணைப் பணம் ரூபா 25/-

விபரங்கள் கிராமசபைக் காரியாலயத்திலும் உதவி ஸ்தலஸ்தாபன அதிபர் (வட மேல் பிரிவு) காரியாலயத்திலும் அறிந்து கொள்ளலாம்.

சி. செல்வநாயகம்,
கி. ச. அக்கிராசனர்,
ஏழாலை.

கிராமசபைக் காரியாலயம்,
ஏழாலை, 4-6-65 408

**REGAL - JAFFNA**
**NOW SHOWING**
Danny Kaye
in
THE MAN FROM
THE
DINERS' CLUB

## [illegible]மான 4வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாசா (வெள்ளவத்தை) — நவா (கும்பனித்தெரு)
விஜயா (மகிழக்கனப்பு) — விஜிதா (வட்டன) — தீபொலி (அவரேலியா)
வெம்பிலி (கண்டி) — யொடோர்ன் (பதுளை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பிற்பகல் 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30 பி. ப. 2-30 6-30 9-30



★ சிவாஜி கணேசன்
★ எஸ். எஸ். ஆர்., நாகேஷ்
★ விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த

# பச்சை விளக்கு



## [illegible] விளம்பரம்

**தேவை**

பெற்ரோல் பம்பர் உடனடியாகத் தேவை. மாதச்சம்பளம் எவ்வளவு என்றும் நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். கே. இரத்தினம் லங்கா பெற்றோல் செட் மகாத்மா காந்தி வீதி யாழ்ப்பாணம். 378

விற்பனையாளர் தேவை. தகுந்த கொமிஷன் கொடுக்கப்படும். எழுதவும் அல்லது நேரில் வரவும். தென்மாலன் தயாரிப்பாளர்கள், கோட்டைப் சந்தி, கோப்பாய். 375

**விற்பனைக்கு**

K. சீரியல் பேபி ஒஸ்டின், 1955 ம் ஆண்டுக்குரிய லைசன்ஸ் உட்பட விற்பனைக்குண்டு. சுதர் C/o தருமாளியா ஹொட்டல், வவுனியா. 376


# பூநகரிப்பாடசாலைகள் இசைவிழா

## பரிசு பெற்றவர்களின் விபரம்

கோண்டாவில், ஞாயிறு பூநகரிப் பகுதிப் பாடசாலைகளின் இசைவிழா அண்மையில் வித்தியாதரிசி திரு. கே. கனகசபாபதி தலைமையில் பூநகரி மகா வித்தியாலய அலங்கார மண்டபத்தில் நடைபெற்றது. பூநகரிப்பாடசாலைகள் யாவும் கலந்துகொண்டன.

மாணவ மாணவிகளின் அபிநயப்பாட்டுகளும் நடனங்களும் நாடகங்களும் நடைபெற்றன, மகாவித்தியாலய மாணவர்கள் நடித்த "கைலஞசம்" என்னும் நாடகம் சிறப்பாக இருந்தது. "கடன் தீர்ந்தது" என்னும் நாடகம் மகாவித்தியாலய மாணவிகளால் நடித்துக் காண்பிக்கப்பட்டது. இறுதியில் பாராட்டுகளைப்பெற்ற பாடசாலைகளுக்கு பாராட்டுப்பத்திரங்களும் பரிசுகளும் பூநகரி மகா வித்தியாலய அதிபர் திரு. கே சோமசுந்தரத்தினல் வழங்கப்பட்டன.

**போட்டிமுடிவுகள்**

அபிநயப்பாட்டு

1-ம் பரிசு கில்லடி அ. த. க பாடசாலை. 2-ம் பரிசு நல்லூர் அ. த. க. பாடசாலை, 3-ம் பரிசு அத்தாய் அ. த. க. பாடசாலை.

கிராமிய நடனம்

1-ம பரிசு அத்தாய் அ. த. க பாடசாலை, 2-ம் பரிசு தம்பிராய் அ. த. க. பாடசாலை, 3-ம் பரிசு சாமிப்புலம் அ. த. க. பாடசாலை.

கர்நாடக சங்கீதம்

1-ம் பரிசு பூநகரி அ. மகா வித்தியாலயம், 2-ம் பரிசு செட்டியகுறிச்சி அ. த. க பாடசாலை, 3-ம் பரிசு நல்லூர் அ. த. க பாடசாலை.

கீழைத்தேய நடனம்

1-ம் பரிசு நல்லூர் அ. த. க பாடசாலை.

நாடகம்

1-ம் பரிசு பூநகரி மகாவித்தியாலயம் (ஆண்கள்), 2-ம் பரிசு பூநகரி மகாவித்தியாலயம்

நாட்டுப்பாடல்

1-ம் பரிசு செல்வியாதீவு அ. த. க பாடசாலை, 2-ம் பரிசு செல்லியாதீவு அ. த. க பாடசாலை (பெண்கள்)

கதகளி, கும்மி, கோலாட்டம், காவடி

1-ம் பரிசு பூநகரி மகாவித்தியாலயம் (கும்மி) 2-ம் பரிசு நல்லூர் அ. த. க பாடசாலை (கும்மி), 3-ம் பரிசு அத்தாய் அ. த. க பாடசாலை (காவடி).

# "எமது முயற்சிக்கு...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கு ஆளானார்கள். இப்படியாக கடந்த ஒன்பது ஆண்டுகளாக கலை பெற்றுவந்த அநேக தமிழ் உரிமை இயக்கங்களில், தங்கள் வாழ்க்கையே அர்ப்பணித்தனர் பலர். பலர், குடும்பத்துடன் வந்து போராட்டத்தில் குதித்தார்கள். இவர்கள்பட்ட துன்பங்கள், துயரங்கள் எல்லாம் இன்று ஓரளவில் பயனளித்துள்ளது.

### நான்கு தலைவர்களை இழந்தோம்

தமிழினம் இன்று மதிக்கப்படும் இனமாக வாழ்வதற்கு காரணம், கடந்த காலத்தில் செய்யப்பட்ட தியாகம்தான். நமது தலைவர்களில் ஒருவர் பின் ஒருவராக, நான்குபேரை இழந்தோம். அவர்கள் நால்வரும் தமிழினத்திற்காக, பகலென்றும் இரவென்றும் பாராது, கஷ்டத்திற்கு மேல் கஷ்டங்கள் அனுபவித்தார்கள். தமிழினத்தின் உரிமையைப் பெறவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். நம்மிடையே அவர்கள் இல்லாவிட்டாலும் அவர்கள் விட்டுச்சென்ற இலட்சியங்கள், எமக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கின்றது.

தமிழினம் துன்பப்பட்ட போது, தூங்கிக்கொண்டிருந்தவர்கள், இன்று உரிமையைப் பெற்றுத்தருவோம் என வீரம் பேசுகிறார்கள். நாங்கள் தியாகஞ் செய்துகொண்டிருந்த சமயம், அரசியலுக்கு முழுக்குப் போட்டு ஒதுங்கியிருந்தவர்கள் தமிழினத்தின் பாதுகாவலர் என்று புறப்பட்டுவிட்டனர். தமிழினத்திற்கு அவர்கள் உரிமையைப்பெற்றுத்தர முன்வந்தால் நாங்கள் அதை எதிர்க்கவில்லை. அவர்கள் பெறும் உரிமைகளுக்கு நாங்கள் முட்டுக்கட்டை போடமாட்டோம். தாங்களும் உரிமையைப் பெற்றுத்தர முன்வராது, நாங்கள் பெறும் உரிமைகளுக்கும் முட்டுக்கட்டை போடுகிறார்கள்.

### வட்டமேசையை ஏற்கும் கட்சிகள் எவை?

வட்டமேசை மகாநாட்டை சகலகட்சிகளும் ஏற்கும்போது சமஷ்டிக்கட்சி மட்டும் ஏற்காதது ஏன்? என்று கேட்கிறார்கள். வட்டமேசை மகாநாட்டை எந்தெந்தக் கட்சிகள் ஏற்றுள்ளது என்று கணக்குக் காட்ட முடியுமா? தேசிய அரசாங்கத்திலுள்ள எந்தக் கட்சியாவது வட்டமேசைபற்றி கூறியுள்ளதா? எதிர்க் கட்சிகளாவது கூறியுள்ளவா? இப்படியிருக்கும்போது வட்டமேசை மகாநாட்டை எல்லாக் கட்சிகளும் ஏற்றுள்ளதாக எப்படிக் கூறமுடியும்? தாங்கள் ஒரு உடன்பாட்டின்பின்தான் அரசாங்கத்தை ஆதரிக்க முன்வந்தோம். பிரதமர் டட்லியே இதை பாராளுமன்றத்தில்தெரிவித்துவிட்டார். டட்லி சேனாநாயகவிக்கும், திரு. செல்வநாயகத்திற்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தைகள் எழுத்தில் இருப்பதாக பிரதமரே கூறியுள்ளார். இனிமேலாவது எங்களைப்பற்றி பொதுமக்களிடம் தவறாக பிரசாரஞ் செய்யமாட்டார்களென நம்புகிறேம்.

திருகோணமலை எம். பி. திரு எம். மாணிக்கராசா பேசும் போது, கிழக்கு மாகாணத்தில் இரு தலைவர்களையும்; வடக்கு மாகாணத்தில் இருதலைவர்களையும், நாம் இழந்துவிட்டபோதிலும், அத்தொகுதிகளில் மீண்டும், அதேதலைவர்களின் கொள்கைகளைப் பின்பற்றுபவர்களையே மக்கள் தெரிவு செய்திருக்கிறார்களென்றும், கடந்த காலத்தில் அவர்கள்பட்ட கஷ்டங்களும், செய்த தியாகங்களும் வீண்போகவில்லை யென்றும் கூறினர்.

ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசும்போது, தமிழ் பகுதிகளின் தமிழ்மக்கள் ஒருவரை ஒருவர் தாக்கிப்பேசினாலும், மற்றவர்கள் மத்தியில். மதிப்போடு இருக்கவேண்டியது அவசியமென்றும், பாராளுமன்றக் குழு கூட்டத்திலும் இந்த நல்ல வழியையே கடைப்பிடிப்பதாகவும், கடந்தகாலத்தில் தமிழினம் பட்டுவந்த கஷ்டங்கள் தற்பொழுது சிறிதளவு நீங்கி, நம்பிக்கை பிறந்துள்ளதென்றும் கூறினர்.

### இரத்ததானம் செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இரத்ததான சங்கம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு 600 பைந்து இரத்தம் தேவைப்படுகிறதென்றும், இரத்தம் கொடுக்க எல்லோரும் முன்வர வேண்டுமென்றும் திரு. நவரத்தினம் கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணம் மாநகரசபை மேயர் திரு. எஸ். கி. மகாதேவா, திரு. வின்சன்ட், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் ஆகியோரும் பேசினர்கள்.

## தந்தியின் மர்மம்

சுழிபுரம், சனி

பண்டத்தரிப்பு காலையடியைச் சேர்ந்த ரி. காசிலிங்கம் என்பவருக்கு அநுராதபுரம் சிறைச்சாலையில்வேலை செய்யும் எஸ். அப்புத்துரை என்பவர் அனுப்பியதாக ஒரு தந்தி பண்டத்தரிப்பு தபால் கந்தோர் மூலம் நேற்று முன்தினம் விநியோகிக்கப்பட்டது. தந்தியில் ''உமது சகோதரர் சிவப்பிரகாசம் மாரடைப்பினால் காலமானார்'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. தந்தியைக் கண்டதும் உறவினர்கள் எல்லோரும் அதிசயப்பட்டனர். துக்கம் கொண்டாடினர். ஒரு கோஷ்டியினர் 'யாழ்தேவி' மூலம் அநுராதபுரம் சென்றனர். ஒரு கோஷ்டியினர். தொலைபேசி மூலம் அப்புத்துரையுடன் தொடர்பு கொண்டனர்.

அப்புத்துரை மிகவும் அதிசயத்துடன் தான் தந்தி அடிக்கவில்லை என்றும் சிவப்பிரகாசம் உயிருடன் இருப்பதாகவும் தெரிவித்தார். யாழ்தேவி மூலம் சென்றவர்கள் சிவப்பிரகாசம் உயிருடன் இருப்பதையும் கண்டு வியப்புற்றனர்.

## கவிதை மஞ்சரி

கொழும்பு, சனி

கவிஞர்களையும் கவிதை ஆர்வமுள்ளவர்களையும் ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இலங்கை வானொலியின் தமிழ்ப்பகுதி, ''கவிதை மஞ்சரி'' என்று ஒரு நிகழ்ச்சியை மாதந்தோறும் ஒலிபரப்ப ஏற்பாடு செய்துள்ளது. இத்தொடரில் வரும் முதல் நிகழ்ச்சி ஜுலைமாதம் 28-ம் திகதி புதன்கிழமை இரவு ஒலிபரப்பாகும்.

எழுதும் ஆற்றலுள்ளவர்கள் அனைவரும் தாம் விரும்பும் பொருள் பற்றி ஐந்து நிமிடங்களுக்குக் குறையாமலும் பத்து நிமிடங்களுக்கு மேற்படாமலும் படிக்கத்தக்க கவிதைகளை எழுதி அவற்றை இலங்கை வானொலியின் தமிழ் நிகழ்ச்சி அதிகாரிக்கு இம்மாதம் 30-ம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்குமாறு கேட்டிருக்கிறார்கள். ஒலிபரப்புக்குத் தகுதியான கவிதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒலிபரப்பப்படுவதுடன், அவற்றிற்குச் சன்மானமும் வழங்கப்படும் என்று தெரியவருகிறது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## தியாகி கந்தசாமி தினம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தனிப்பட்ட ஒரு பிரிவினருக்காகவோ, சமூகத்தினருக்காகவோ திரு. கந்தசாமி தமது உயிரை அர்ப்பணிக்கவில்லை. பொது நோக்கத்திற்காக, சிங்களவர், தமிழர், எல்லோரினதும் நன்மையை முன்னிட்டு, தமது உயிரை தியாகஞ் செய்தார். அவரின் நாமம் தொழிலாளர்கள் இந்நாட்டில் இருக்கும்வரை நிலைத்து நிற்கும்''

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்றுமாலை நடைபெற்ற கந்தசாமி நினைவு தினத்தில், அரசாங்க இலிகிதர்சேவைச் சங்க தனதிகாரி திரு. பி. ஏ. வணசிங்கா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

காலஞ்சென்ற கந்தசாமியின் தாயாருக்கு, சங்கத்தின் சார்பில் திரு. பி. ஏ. வணசிங்கா பொற்கிளியொன்றை வழங்கினர்.

திரு. எம். ராஜரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், திரு. வணசிங்கா மேலும் கூறியதாவது: அரசாங்க ஊழியர்களை அன்று பல பிரச்னைகள் எதிர்நோக்கின. நாளாந்த வாழ்க்கையை நடாத்துவதற்கு சம்பளம் காணாது திண்டாடினர்கள். தங்கள் குடும்பங்களை காப்பாற்ற முடியாமல் கஷ்டமைடந்தார்கள் இப்படியான பல காரணங்களுக்காகஏற்பட்ட பொதுவேலை நிறுத்தத்தின் போதே கந்தசாமி தமது உயிரை தியாகம் செய்தார்.

திருவாளர்கள்: எம். துரைராசா, ஏ விஸ்வநாதன், எஸ். அருமைநாயகம் ஆகியோரும் பேசினர்கள்.

## கூட்டுறவு..:

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை நடத்தும் முறைகளை மாற்றமின்றி அங்கே செய்து வருகிறார்கள், சங்கங்கள் சிறந்த முறையில் நடக்கவேண்டுமானால், கூட்டுறவு அடிப்படைத்தத்துவங்களில் மாற்றம் ஏற்படக்கூடாது. எமது சமுதாயம் முன்னேறுவது கூட்டுறவு இயக்கத்தில் தங்கியுள்ளது. நாம் பொருளாதார சுபீட்சமடைய வேண்டுமானால் கூட்டுறவு இயக்கத்தைப்பலப்படுத்தவேண்டும்.

யாழ். கிழக்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு எம். மதிபாலசிங்கம் பேசும் போது கூறியதாவது: எமது சங்கத்தில் குறைபாடுகள் இருக்கிறதென்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஏதாவது நிகழும் போதுதான் இவற்றை நாம் அதிகம் அறிய முடிகிறது. இவை ஏற்படுவதற்குக்காரணம், சங்கத்தை நடத்தும் முறைதான். எங்கள் சங்கங்களை திறமையாக நடாத்த நாங்கள் அக்கறை எடுப்பதில்லை. சில தவறுகள் ஏற்படும் பொழுதே சங்கங்கள் பற்றி அக்கறைப் படுகிறேம்.

கூட்டுறவு இயக்கத்தில் அக்கறை எடுப்பதற்கும், தங்கள் கடமைகளையும், பொறுப்பையும் உணர்ந்து கொள்வதற்காகவே இப்படியான ஆய்வு வகுப்புகள் நடைபெறுகின்றன. இப்படியான ஆய்வு வகுப்புகளினால் மட்டும் பிரச்னைகளைத் தீர்த்துவிடமுடியாது. ஆனால் இவ்வகுப்புகள் உதவியாக இருக்கும்.

## புதிய திருட்டுகள்

வவுனியா, ஞாயிறு

வவுனியாவில் இப்பொழுது புதுவிதமான திருட்டு தலைகாட்டியுள்ளது. இப்பகுதியில் விளைவாய் பம்பாய் வெங்காய நாற்றுகள் திருட்டுப்போய் விடுகின்றன. இத்திருட்டுகள் பகலில்தான் அதிகமாம்.

### சூறாவளி சேதம்

# உடனடி நிதி உதவி அளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

கடந்த டிசம்பர் மாதத்தில் இங்கு வீசிய சூறாவளியினால் சேதமுற்ற பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், நெசவு நிலையங்கள் உட்பட பல கட்டடங்கள் இன்னும் திருத்தப்படவில்லை என்றும் இவற்றை திருத்தி அமைக்க அரசாங்கம் உடனடியாக நிதி உதவி வழங்கவேண்டும் என்றும் கோரும் பிரேரணை நேற்று நடைபெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. பெருமையினர் தலைமைவகித்தார்.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. வி. தர்மலிங்கம், திரு. வி. என். நவரத்தினம், திரு. வி. நவரத்தினம், திரு. எம். சிவசிதம்பரம், திரு. க. பொ, இரத்தினம் ஆகிய எம். பி. க்கள் உட்பட பல உத்தியோகத்தர்கள் கூட்டத்துக்கு சமூகமளித்திருந்தனர்.

யாழ்ப்பாணப் பகுதியில் சேதமான பாடசாலைகளை திருத்துவதற்காக ஒதுக்கப்பட்ட ஏழுலட்சம் ரூபாவை அரசாங்கம் உடனடியாக வழங்கவேண்டுமென்று உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் கொண்டுவந்த பிரேரணை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

முன்னர் அறிவித்தற்கிணங்க. இக்கூட்டத்தில் திரு. கா. பொ. இரத்தினம் தமிழில் உரை நிகழ்த்தினர். ஆதார தொழிற்பயிற்சிப் பாடசாலை நிறுவப்படவேண்டும் என்றும் கிளிநொச்சி தொகுதியிலுள்ள பாடசாலைகளில் போதிய ஆசிரியர்களை நியமிப்பதுடன் இங்குள்ள மகாவித்தியாலயங்களில் விஞ்ஞான ஆசிரியர்களை நியமிக்கவேண்டும் என்றும் திரு. கா. பொ. ரத்தினம் பிரேரித்திருந்த பிரேரணைகள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

## "வட-தென்..:

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அபிப்பிராயபேதங்களை வரவேற்கும் நம்நாட்டின் ஒரு குழுவினர் இருக்கின்றனர். அதை வரவேற்பது மட்டுமல்ல தாராளமாக அதை உபயோகிப்பார்கள். ஆகவே தமிழ் பேசும் மக்களின் முன்னேற்றத்திற்காகவும் தமிழ்க்குழந்தைகளின் எதிர்காலத்திற்காகவும் இந்நாட்டு நலனுக்காகவும் உங்கள் அபிப்பிராய பேதங்களை நீங்கள் நீடித்துக் கொள்ளக் கூடாது.

திருவாளர்கள் ஏ. அமிர்தலிங்கம், வி. தர்மலிங்கம் மற்றும் பலரும் பேசியபின் திரு. செல்வநாயகம் நன்றி தெரிவித்துப் பேசுகையில் பின் வருமாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் இப்போது இருக்கும் சட்டத்தின்படி தனிச் சிங்களமே நாடு முழுவதும் அரசகரும மொழியாக இருக்கின்றது. தற்போது இதனை மாற்றுவதற்கு சிங்கள அரசியல் கட்சிகள் ஒன்றும் ஆயத்தமாக இல்லை. ஆகையினால் இப்போது இருக்கும் சட்டத்தின் பிரகாரம யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளிலுள்ள அரசாங்க காரியாலயங்களில் தனிச் சிங்கள மொழியிலே நிர்வாகங்கள் நடைபெற்று வரும். எனவே தான் இதை நிறுத்துவது மிக அவசியமானது. இந்தப் பொறுப்பை மக்கள் எமது கட்சியிடம் கொடுத்துள்ளனர். இப்படி இருக்கும்போது ஐக்கிய தேசியக்கட்சி எங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்திய போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழையே நிர்வாக மொழியாக ஆக்குவதற்கு சம்மதம் கொடுத்தார்கள். அதைவிட மற்றைய ஏழு மகாணங்களிலுள்ள தமிழ் பேசும் மக்கள அங்குள்ள அரசாங்க காரியாலயங்களுடன் தமது அலுவல்களை தமிழ்மொழியில் செய்வதற்கு வசதியளிப்பதாக சம்மதித்தார்.

விழா ஆரம்பத்தில் திரு செல்வநாயகம் எம். பி. இரும் பசிட்டி மகாதேவா வித்தியாசாலைக்கு அருகிலிருந்து மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார், ஊர்வலம் சென்ற பாதையில் பெரும் திரளான மக்கள் குழுமி நின்று பூரண கும்பங்களை வைத்து மலர் மாலைகள் சூட்டி அவரை வரவேற்றனர்.

திரு. செல்வநாயகம் மேலும் குறிப்பிட்டதாவது: எமது கட்சியின் இலக்கு தமிழருக்கும் சிங்களத்துக்கும் இலங்கை முழுவதும் சம அந்தஸ்து இருப்பதேயாகும். அந்த இலக்கைவிடாமல் யூ. என். பி. கட்சியுடன் தற்காலிகமாக நாம் ஒரு உடன்பாட்டிற்கு வந்துள்ளோம். அந்த ஒப்பந்தம் சம அந்தஸ்துக்கு கிட்டியதாக இருக்கிறது.

தமிழர்களது உரிமைகள் சம்பந்தமான தீர்ப்புகளை வட்டமேசை மகாநாடுமூலம் தீர்த்துக் கொள்ள முடியாது, சில கட்சிகள் இப்போது யு. என். பி. எமக்குக் கொடுக்கவேண்டியிருக்கும் உரிமைகளுக்கு மாறாகத்தான் வட்டமேசை மகாநாட்டில் கூறுவர், ஆகவே சர்வகட்சி மகாநாடு கூடுவது எமக்கு நஷ்டமேயொழிய லாபம் ஒன்றும் இல்லை. இப்பொது ஆளுங்கட்சி எமக்குக்கொடுக்கவிருக்கும் உரிமைகளை நாம் பெற்றுக் கொள்வதே புத்தியாகும். தனிச்சிங்களச் சட்டத்தை மாற்றுவதில்லையென மந்திரி திரு. திருச்செல்வம் செனட்சபையில் கூறியதன் அர்த்தம் இதுவேயாகும்.

## புதிய அதிகாரி

வவுனியா, ஞாயிறு

பொலன்னறுவ கச்சேரி காரியாலய அதிகாரி திரு. பொன்னையா வவுனியா கச்சேரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## விவசாய இலாகா வெற்றி

வவுனியா, ஞாயிறு

வவுனியா விவசாயஇலாகா கோஷ்டிக்கும் ஒட்டிசுட்டான் நீர்ப்பாசன இலாகா கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப்போட்டியில் விவசாயஇலாகா வெற்றியீட்டியது. விவசாய இலாகா கோஷ்டிக்கு திரு. சிவராஜா தலைமை வகித்தார்.

## புதிய நியமனம்

வவுனியா, ஞாயிறு

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவுக் காரியாதிகாரி திரு. நல்லைநாதன் மன்னார், வவுனியா மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளராக நியமிக்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

## இடமாற்றம்

வவுனியா, ஞாயிறு

வவுனியா மன்னார் மாவட்டஸ்தலஸ்தாபன உதவிக்கமிஷனர் திரு. சிவராஜா திருகோணமலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.